முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு

அசல் வழக்கு எண். 111/2014

2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 06-ந்தேதி வாதி தரப்பு சாட்சியின் பி,வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின் படி திரு.கி.ஹரிஹரன், எம்.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணபதி | ஜாதி | : | |
| த/பெ.பெயர் | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| மாவட்டம் | : | | வயது | : | |

முதல் விசாரணை:

நான் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். நிருபண வாக்குமூலப் பட்டியல் ஆவணங்களில் உள்ள ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். நிரூபண பட்டியல் ஆவணங்களலி முதல் ஆவணம் தவிர்த்து இதர ஆவணங்கள் முறையே பி,வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்ய வாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையின்பேரில் குறியீடு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | 13.01.2011 | *நானும் எனது மனைவி ஜி.மல்லிகாவும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, ஈரோடு கிளையில் வீட்டு வசதி கடனிற்காக எழுதிக் கொடுத்த ஈட்டு அடமான ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல்* |
| 2 | 12.03.2014 | *பிரதிவாதி கே.ராஜா என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தின் பதிவிட்ட நகல்* |
| 3 | 03.02.2015 | *பிரதிவாதியும் அவருடைய மனைவி மல்லிகாவும் கலைசித்ரா மற்றும் செல்வராஜ் என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தின் பதிவிட்ட நகல்* |
| 4 | 01.04.2014 | *மொடக்குறிச்சி காவல்நிலையம் பிரதிவாதிக்கு வழங்கிய புகார் மனு ரசீது* |
| 5 | 01.04.2014 | *பிரதிவாதி மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் தாக்கல் செய்த புகார் மனு* |
| 6 | 31.08.2015 | *ஈரோடு கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு குற்றவியல் வழக்கு எண்.27/2015ல் ஏற்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகல்* |

*வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.*